# <u>சுதந்திர தின வாழ்த்துச் செய்தி</u>

நாள்: 14.08.2014

புதுச்சேரி மாநில மக்கள் அனைவருக்கும் எனது சுதந்திர தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நமது இந்திய தேசத்தின் 68-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இந்த வேளையில், நமது நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட அண்ணல் காந்தியடிகள் மற்றும் அரும்பெரும் தலைவர்களின் தியாகங்களையும், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தன்னுடைய இன்னுயிரை ஈந்த தியாகிகளையும் நினைத்துப் பார்த்து வணங்குவது நமது கடமையாகும்.

இந்தத் திருநாளில் உங்கள் அன்போடும், ஆசியோடும் பொறுப்பேற்ற எனது தலைமையிலான அரசானது புதுச்சேரி மாநில வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறது. நமது மாநில வளர்ச்சிக்கு தேவையான தரமான கல்வி வழங்குவதில் எனது அரசு முனைப்போடு செயலாற்றி வருகிறது. ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களும் நல்ல கல்வி பெற வேண்டும் என்பது எமது அரசின் மிக முக்கிய நோக்கமாகும்.

மாணவர்கள் மீது அக்கறை கொண்டு பல திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது.இலவச கல்வி என்ற நிலையில் அனைத்து பிள்ளைகளுக்கும் சீருடை, புத்தகம், எழுதுபொருட்கள், காலை சிற்றுண்டி, மதிய உணவு, மிதிவண்டி, குடை, மழை அங்கி ஆகியவற்றை இலவசமாக வழங்கி வருகிறது. அதுமட்டுமல்லாமல் எழுது பொருட்கள் உள்ளிட்ட செலவினங்களுக்காக ரூ.250/- வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு உயர்கல்வி எளிதில் கிடைக்கும் வகையில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் கல்விக் கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது. சென்டாக் மூலம்

தேர்வு செய்யப்படும் மருத்துவம், பொறியியல் பயிலும் மாணவர்களுக்கு அரசே கல்விக் கட்டணத்தைச் செலுத்தி வருகிறது.

மேலும், தனியார் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வங்கிகள் மூலம் கடனுதவியும் அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நல்ல கல்வி கிடைக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். இந்த நடவடிக்கைகளின் மூலமாக பள்ளிக்கல்வியில் நமது புதுச்சேரி மாநிலம் முதலிடத்தில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

புதுச்சேரி மாநிலத்தைச் சார்ந்த மக்களுக்கு நல்ல மருத்துவ வசதியை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எனது அரசு செயல்பட்டு வருகிறது. இதன் விளைவாக யானைக்கால் நோய் இல்லாத மாநிலமாக நமது புதுச்சேரி மாநிலம் உருவாக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் தொற்றுநோய் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் மருத்துவ வசதியை மக்களுக்குக் கொடுப்பதில் புதுச்சேரி மாநிலம் முதலிடத்தைப் பிடித்துள்ளது என்பதை சொல்லிக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

புதுச்சேரி மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தேவையான தொழிற்சாலைகளைக் கொண்டு வருவதற்கு எனது அரசு முனைப்பான திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதில் எனது அரசு அதிக நாட்டம் கொண்டுள்ளது. விவசாய பெருமக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து வருகிறது.

ஒரு மாநில வளர்ச்சி அதன் உள்கட்டமைப்பு வசதியைப் பொறுத்து அமைகிறது என்ற நிலையில் புதுச்சேரி மாநிலத்தில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் எனது அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது.

பொதுப்பணித்துறை மூலமாகவும், உள்ளாட்சித்துறை மூலமாகவும் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது. புதிய சாலைகள், புதிய கட்டிடங்கள், ஆறுகளின் மேலே புதிய பாலங்கள் ஆகியவற்றை எனது அரசு அமைத்து வருகிறது.

புதுச்சேரி மாநில மக்களுக்கு சுத்தமான காற்று, சுகாதாரமான குடிநீர் கிடைக்க வேண்டும் என்பதில் எனது அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. படுகை அணைகளைக் கட்டி ஆழ்துளை கினறுகள் மூலமாக மக்களுக்கு நல்ல குடிநீரை அளித்து வருகிறது. எதிர்காலத்தில் மேலும் புதிய படுகை அணைகளைக் கட்டி புதுச்சேரி மாநிலத்தில் எப்போதும் நல்ல குடிநீர் கிடைக்கும் என்ற நிலையை அடைய எனது அரசு எண்ணியிருக்கிறது. அதேபோன்று மக்களுக்கு நல்ல காற்று கிடைக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சுற்றுச்சூழலைப் பாதிக்காத வகையில் செயல்படும் தொழிற்சாலைகளைக் கொண்டு வருவதில் எனது அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. நல்ல கல்வியைக் கொடுக்கின்ற அதே வேளையில், வேலைவாய்ப்பையும் அளிப்பதில் எனது அரசு கவனம் செலுத்தி வருகிறது.

புதுச்சேரி மாநிலத்தில் வருவாயை ஈட்டிக் கொடுப்பதில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பழைய நகரமான நமது புதுச்சேரி மாநிலத்தின் அழகை மேம்படுத்தி, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் மூலம் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று அனைத்துப் பகுதிகளையும் மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றன. காரைக்கால், மாகே, ஏனாம் ஆகிய மூன்று பகுதிகளும் சமமான முன்னேற்றம் காண வேணடும் என்பதில் அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. காரைக்காலில் கோயில் நகரம்

மேம்படுத்தப்பட்டு வருகிறது. ஆலய திருப்பணிகள் செம்மையாக செய்யப்பட்டு வருகிறது. அதேபோல், ஏனாமில் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையிலும், நல்ல வளர்ச்சியைக் கொண்டு வரும் நோக்கத்திலும் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. மாகே பகுதி சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் அழகுபடுத்தப்பட்டு வருகிறது. இப்படி, புதுச்சேரி மாநிலத்தின் ஒட்டுமொத்த பகுதியும் சீரான வளர்ச்சியைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு செயல்பட்டு வருகிறது.

நமது புதுச்சேரி மாநில மக்கள் அனைவருக்கும் ஏற்ற வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கான சிறப்புக் கூறு நிதியை எனது அரசு சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்படும் வீடுகள் தரமானதாக இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்கள் வீடு கட்டிக் கொள்ள ரூ.4 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனிற்காக குடிசை மாற்று வாரியம் மூலம் ரூ 2 இலட்சம் நிதி வழங்கப்பட்டு வருகிறது.

இவையெல்லாம் புதுச்சேரி மாநிலத்தின் மீது கொண்டிருந்த மிகுந்த அக்கறையின் மூலம் கொண்டுவரப்பட்ட திட்டங்களாகும். அதுமட்டுமின்றி, அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

எனது அரசு கொண்டு வந்த அனைத்துத் திட்டங்களையும், ஏழை மக்களுக்கான நலத்திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்த அரசு முனைப்போடு உள்ளது. பசிப்பிணியைப் போக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பத்து கிலோ இலவச அரிசி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், எனது அரசானது இலவச வேட்டி, சேலைகளை தரமானதாக வழங்கி வருகிறது. முதியோர்

உதவித்தொகை உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற உதவித்தொகையும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு நலத்திட்டங்களையும் எனது அரசு சிறப்பாக கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சுதந்திரத் திருநாளில் என்னுடைய அரசானது புதுச்சேரி மாநில வளர்ச்சிக்கு மிகுந்த கவனம் செலுத்தும் என்று ம் அறிவித்த திட்டங்கள் அனைத்தையும் செயல்படுத்தும் என்றும் இந்த நேரத்தில் கூறிக்கொண்டு அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ந.ரங்கசாமி)**

மாண்புமிகு முதலமைச்சர்